# பலாகல பிரதேச சபை

# அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 23 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,954,141 இற்கான தேறிய காசுப் பாய்ச்சல் ஒன்று காட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் ஆரம்ப மற்றும் இறுதிக் காசு மீதிகளின் பிரகாரம் தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,839,359 ஆகும். அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,114,785 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 2,238,943 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 633,421 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வீத வரி

----------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி அடைந்துள்ள பகுதிகளை இனங்கண்டு அதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 முத்திரைக் கட்டணம்

----------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சபைக்கு அறிவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் 2013 இறுதியில் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 687,975 இனை மீளாய்வாண்டிலும் அறவிட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 499,089 இற்கான மீதி ஒன்று 2010-2012 காலப் பகுதியில் அமுல் நடத்தியிருந்த 06 கமநெகும அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக பெற வேண்டியவை எனக் காட்டப்பட்டிருந்த மீதி ஒன்றாக காணப்பட்டதுடன் அப் பணத்தை அறுதியாக இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகளில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 2,191,490 இற்கான மீதி ஒன்று 2010-2013 காலப் பகுதியில் அமுல் நடத்தப்பட்ட 19 பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையாகக் காணப்பட்டதுடன் அக் கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு